# ஒதுக்கீட்டுத் தலைப்பு - 124 - சமூக சேவைகள் அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2012 ஆம் ஆண்டு

---

இந்த அறிக்கை இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

I ஆவது பகுதி- அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் சம்பந்தமான சுருக்கமான அறிக்கை

II ஆவது பகுதி- ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்பிற்கும் உரிய விபரமான அறிக்கை

## I ஆவது பகுதி

## சமூக சேவைகள் அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் சம்பந்தமான சுருக்கமான அறிக்கை

---

### 1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்

| செலவினத் தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 216 | சமூக சேவைகள் திணைக்களம் |

### 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த ஏற்பாடுகள் மற்றும் செலவுகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக வழங்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய நிதிஏற்பாடு ரூபா 1,713,052,350 ஆக இருந்ததுடன் இதில் ரூபா 1,574,447,852 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் அமைச்சு மற்றும் திணைக்களத்தின் தேறிய ஏற்பாட்டில்

சேமிப்பு முறையே ரூபா 117,541,694 மற்றும் ரூபா 21,062,804 தொகை அதாவது மொத்த தேறிய ஏற்பாட்டில் 8.5 சதவீதத்திற்கும் 6.2 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் இருந்தது. விபரம் பின்வருமாறு.

| ஒதுக்கீட்டுத் தலைப்பு | அமைச்சு/ திணைக்களம் | 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தேறிய ஏற்பாடுகள் | | 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பயன்பாடுகள் | | 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சேமிப்பு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டுவருபவை | மூலதனம் | மீண்டுவருபவை | மூலதனம் | மீண்டுவருபவை | மூலதனம் |
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| 124 | சமூக சேவைகள் அமைச்சு | 1,199,046,000 | 175,818,000 | 1,175,353,783 | 81,968,523 | 23,692,217 | 93,849,477 |
| 216 | சமூக சேவைகள் திணைக்களம் | 307,538,350 | 30,650,000 | 296,509,022 | 20,616,524 | 11,029,328 | 10,033,476 |
| மொத்தம் | | 1,506,584,350 | 206,468,000 | 1,471,862,805 | 102,585,047 | 34,721,545 | 103,882,953 |

**2.2 முற்பணக் கணக்குகள்**

**2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த பின்வரும் எல்லைகள் பின்பற்றப்பட்டிருந்தன.

| தலைப்பு | விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 124 | 12401 | 12,000,000 | 5,077,574 | 3,500,000 | 7,959,469 | 48,000,000 | 18,777,518 |
| 216 | 21601 | 18,000,000 | 11,441,987 | 11,200,000 | 13,304,921 | 100,000,000 | 56,952,143 |

## 2.3 கட்டுநிதி மற்றும் பொது வைப்புக் கணக்குகள்

### (அ) கட்டுநிதிக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களம் என்பவற்றில் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் கட்டுநிதிக் கணக்குகளில் ரூபா 148,178 தொகையான வரவு மீதியும் ரூபா 180 தொகையான செலவு மீதியும் காணப்பட்டன.

### (ஆ) பொது வைப்புக் கணக்குகள்

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களம் என்பவற்றில் பொது வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,416,558 ஆக இருந்ததுடன் அது தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன.

| **அமைச்சு / திணைக்களம்** | **கணக்கு இலக்கம்** | **2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி** |
|---|---|---|
| | | **ரூபா.** |
| சமூக சேவைகள் அமைச்சு | 6000/0000/00/0015/0037 | 2,959,421 |
| சமூக சேவைகள் திணைக்களம் | 6000/0000/00/0015/0097 | 1,457,137 |
| மொத்தம் | | 4,416,558 |

## II ஆவது பகுதி

## ஓவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்பிற்குமான விரிவான அறிக்கை

### 1. ஒதுக்கீட்டுத் தலைப்பு- 124- சமூக சேவைகள் அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

சமூக சேவைகள் அமைச்சின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 ஒக்தோபர் 15 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது செவ்வை பார்த்தலின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக்

கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்குகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் சமூக சேவைகள் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) முதல் (ஊ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 1.4 முதல் 1.11 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### (அ) புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை

(i) அமைச்சினால் கீழே குறிப்பிடப்படுகின்ற பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் |
| --- | --- |
| இருப்புப் புத்தகம் | நி.பி. 751 |
| நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபம் |

(ii) வாடகை உடன்படிக்கை, பட்டியல்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தரின் சான்றிதழ், செயல் முன்னேற்ற அறிக்கை போன்ற தேவையான சான்றுகள் அமைச்சில் காணப்படாமையினால் ரூபா 100,919,791 தொகையான செலவினத்திற்குரிய கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

**(ஆ) பாதீட்டு முரண்கள்**

(i) 06 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 77,890,000 கூட்டுத்தொகையான மொத்தத் தேறிய நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 19 செலவின விடயங்களுக்காக மிகை நிதிஏற்பாடுகள் செய்யப்பட்ட காரணத்தினால் நிதிஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அச்செலவின விடயத்திற்குரிய தேறிய நிதிஏற்பாட்டில் 11 சதவீதத்திற்கும் 69 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தன.

**(இ) நிதியேற்பாட்டை மாற்றுதல்**

(i) சிறந்த ஆய்வின்றி மதிப்பீடு தயாரிக்கப்பட்டமையின் காரணமாக செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் 18 செலவின விடயங்களில் ரூபா 8,450,000 கூட்டுத்தொகை அதாவது 2 சதவீதம் தொடக்கம் 98 சதவீதம் வரையிலான இடைவெளியில் நி.பி. 66 மற்றும் 69 இன் கீழ் நிதியேற்பாடு மாற்றப்பட்டிருந்ததுடன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்குரிய 09 செலவின விடயங்களில் ரூபா 9,076,000 தொகை

அதாவது 8.17 சதவீதம் தொடக்கம் 93.95 சதவீதம் வரையிலான இடைவெளியில் நி.பி. 66 மற்றும் 69 இன் கீழ் நிதியேற்பாடு மாற்றப்பட்டிருந்தது.

(ii) மதிப்பீடு செய்யும் போது முன்னைய ஆண்டின் செலவினம் தொடர்பாக மீளாய்வு செய்யப்பட்டு மீளாய்வாண்டில் மதிப்பீடு தயாரிக்கப் படாமையினாலும் சில விடயங்களில் மிகைச் செலவினங்களின் காரணமாகவும் நி.பி. 66 மற்றும் 69 இன் மாற்றல் பத்திரம் 3 தொடக்கம் 5 வரை ஈடுபடுத்தப்பட்டு ரூபா 7,938,000 கூட்டுத்தொகையான நிதியேற்பாடுகள் மாற்றப்பட்டிருந்தன.

**(ஈ) கட்டுநிதிக் கணக்கு**

---

(i) நி.பி. 371 இற்கு முரணாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் கீழுள்ள உத்தியோகத்தரல்லாத 03 நபர்களுக்கு ரூபா 34,900 தொகை வழங்கப்பட்டிருந்தது.

(ii) 300 சீடீ பிரதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக ரூபா 13,750 தொகை அமைச்சின் உத்தியோகத்தரல்லாத நபருக்கு வழங்கப்பட்டிருந்தது.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் தொடர்பான இணக்கக்கூற்று**

---

(i) விடய இல 12401 இன் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 41,530 தொகையாக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகளை அறவீடு செய்யமுடியாதிருந்தது.

(ii) திறைசேரிப் புத்தகங்கள் மற்றும் திணைக்களப் புத்தகங்களுக்கிடையே மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 2,043 இனங்காணப்படாத மீதியாகக் காணப்பட்டது.

(iii) 2010 மற்றும் 2011 ஆண்டுகளின் போது ஏற்பட்ட ரூபா 233,652 தொகையான கணக்கீட்டுத் தவறினை சரிசெய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 1.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுகளினதும் செயலாளர்கள், மாகாணசபையின் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் என்போருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஆகக் குறைந்தது தொடர்ந்து வரும் 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் அமைச்சினால் ஆண்டின் ஆரம்பத்தின் போது தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கான கூட்டிணைந்த திட்டம் 2012 ஒக்தோபர் 08 ஆந் திகதி தயாரிக்கப்பட்டிருந்தது.

### 1.4.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

மேலே பந்தி 1.4.1 இல் குறிப்பிடப்பட்ட அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் அமைச்சினால் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2013 செப்தெம்பர் 24 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவில்லை.

### 1.4.3 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 26 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபத்தின் பிராகாரம் 2012 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2012 மார்ச் 01 ஆந் திகதி தயாரிக்கப்பட்டிருந்தது.

### 1.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### (அ) கையேற்கப்படாத சொத்துக்கள்

நன்கொடை உரித்துறுதியின் மூலம் சமூக சேவைகள் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்ட 01 ஏக்கர் 02 றூட் 9.9 பேர்ச் காணி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி மற்றும் இலங்கை வங்கியில் பேணப்படுகின்ற 03 கணக்குகளில் சேமிக்கப்பட்ட பணத்தைச் சட்டரீதியாக கையேற்று நோக்கத்திற்காக ஈடுபடுத்துவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### (ஆ) செயற்பாடற்ற சொத்துக்கள்

இலங்கைத் தகவல் மற்றும் தொலைத் தொடர்பு தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தினால் அரசாங்க வலைப்பின்னல் செயற்திட்டத்தினூடாக அமைச்சிற்கு வழங்கப்பட்ட 10 கணனிகள், 05 தொலைபேசி இணைப்புக்கள் மற்றும் 10 பிரின்டர்கள் உரிய செயற்திட்டத்திற்காக ஈடுபடுத்தப்படாமல் செயற்பாடற்றுக் காணப்பட்டன. அந்த சொத்துக்களை நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் இருப்புப் பதிவேடுகளுக்கு உள்ளடக்கப்படாதிருந்ததுடன் இறுதியாக மேற்கொள்ளப்பட்ட மெய்மையாய்வு அறிக்கைகளிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

#### (இ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2012 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2013 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சினால் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை

அதிபதிக்கு 71/2 மாத தாமதத்தின் பின்னர் 2013 நவம்பர் 15 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**(ஈ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற முறையில் பயன்படுத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுகின்றன.

(i) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான 06 வாகனங்கள் 2012 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் அமைச்சின் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்படாதிருந்ததுடன் அந்த வாகனங்களை கையேற்பதற்கோ அல்லது கையளிப்பதற்கான நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) அமைச்சிற்கு இணைக்கப்பட்ட 02 நிறுவனங்களின் 03 வாகனங்கள் அமைச்சின் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகள் என்பனவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) தாபன விதிக் கோவை | | |
| VI ஆம் அத்தியாயத்தின் 2.10 ஆம் பிரிவு | 2,837,000 | 20 ஆலோசனை உத்தியோகத்தர்களுக்குச் சம்பளம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் நியமித்தல் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடப்பட்டிராததுடன் உரிய உத்தியோகத்தர்களின் பிரத்தியேக கோவைகளும் பேணப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) நிதிப் பிரமாணம்

| | | | |
|---|---|---|---|
| (i) | நி.பி 104(1)(3)(4) | - | 2009 ஆம் ஆண்டின் போது வாகனத்திற்கு ஏற்பட்ட விபத்து தொடர்பாக பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு பூரணமான அறிக்கை, பூர்வாங்க அறிக்கை மற்றும் இறுதி அறிக்கை 2012 திசெம்பர் 21 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நி.பி 115 | 1,847,487 | 02 சந்தர்ப்பங்களின் போது 2011 ஆம் ஆண்டிற்காக 2012 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளிற்காக அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நி.பி 245 | 243,800 | 07 கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் உறுதிப்படுத்தப்படாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. |
| (iv) | நி.பி 753 | - | கொள்வனவு செய்யப்பட்ட மூக்குக் கண்ணாடி பெறுவனவுகளும் விநியோகித்தல்களும் இருப்புப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. |

(இ) சனாதிபதி செயலக சுற்று நிரூபம்

| | | |
|---|---|---|
| 2010 மே 14 ஆந் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க அலுவலக செலவின முகாமைத்துவ சுற்றுநிரூபத்தின் 3.1. ஆம் பந்தி | | சுற்றுநிரூபத்திற்கு முரணாக வாகனங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. |
| 5.2 ஆம் பந்தி | 13,643 | இணைப்புச் செயலாளர் இருவருக்கான 02 தொலைபேசி இணைப்புக்களுக்காக மேலதிகக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

(ஈ) பொது நிருவாகச் சுற்றுநிரூபம்

| | | |
|---|---|---|
| 1996 பெப்ரவரி 26 ஆந் திகதிய 02/99 ஆம் இலக்க சுற்று நிரூபத்தின் 5 ஆம் பந்தி | 78,173 | நியமிக்கப்பட்ட குழுவின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் கையடக்கத் தொலைபேசி வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாது 25 கையடக்கத் தொலைபேசிகள் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. |
| 2008 யூன் 26 ஆந் திகதிய 13/2008 ஆம் இலக்க சுற்று நிரூபத்தின் 5 ஆம் பந்தி | 157,478 | அமைச்சு செயலாளரின் தனிப்பட்ட அங்கீகாரமின்றி மேலதிக எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது. |

(உ) அரசாங்க நிதிச் சுற்றுநிரூபம்

| | | |
|---|---|---|
| 2003 ஏப்ரல் 03 ஆந் திகதிய 446 ஆம் இலக்க சுற்றுநிரூபம் | 109,650 | சுற்றுநிருபத்தின் பிரகாரம் உரித்தற்ற உத்தியோகத்தர்களுக்காக கையடக்கத் தொலைபேசிகளுக்காக மேலதிகப் பட்டியல்கள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

## 1.7 செயலாற்றல்

2012 ஆம் ஆண்டின் பாதீட்டு மதிப்பீடு, கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) நிறைவேற்றப்படாத செயற்பாடுகள்

(i) ஆலோசனை நிலையத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 50,000 தொகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அச்செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2012 பெப்ரவரி 22 ஆந் திகதிய அ.ம.ப/12/0079/534/001 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் மிகவும் இலகுவாக இடர்களுக்கு உள்ளாகக் கூடிய குழுக்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டு அதற்காக தகுதியான சமூகப் பாதுகாப்பு

வலையமைப்பை வழங்கக்கூடிய வகையில் தொடர்புடைய பெயர்களையுடைய குடும்பக் கொள்கையொன்றைத் தயாரிப்பது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) ஆண்டின் போது மாவட்டக்குழு செயலமர்வுகள் காலாண்டு ரீதியாக 4 வீதம் 24 மாவட்டங்களில் 96 செயலமர்வுகள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் 67 குழுச் செயலமர்வுகள் நடாத்தப்பட்டிருந்ததுடன் அது நடாத்தப்பட வேண்டிய மொத்த எண்ணிக்கையில் 70 சதவீதமாக இருந்தது. இருந்த போதிலும் மாவட்டம் 96 செயலமர்வுகளுக்காக செயல் நடவடிக்கைத் திட்டத்தில் இலக்கிடப்பட்ட மாவட்ட குழு செயலமர்வுகள் 50 ஆகக் காண்பிக்கப்பட்டு பௌதீக செயலாற்றல் 67 சதவீதமாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(iv) 2012 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காண்பிக்கப்பட வேண்டிய இலக்குகளை குறைவாகக் காண்பிக்கப்பட்ட காரணத்தினால் 2012 ஆம் ஆண்டின் மாவட்டக் குழுக் கூட்டங்களின் செயல்முன்னேற்றம் 92 சதவீதத்தினாலும் மாகாண உதவி உத்தியோகத்தர் செயலமர்வுகள் 200 சதவீதத்தினாலும் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(v) சீ.பீ.ஆர் கைநூல் அச்சிடுவதற்கு மீளாய்வாண்டின் போது திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அது மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காணப்படாத தேசிய சமூக அடிப்படை புனர்வாழ்வு செயலமர்வு என்ற பெயரில் புத்தகம் அச்சிடப்பட்டிருந்தது.

(vi) பிரதேச செயலகங்களிலிருந்து தனிப்பட்ட பெற்றோர் குடும்பங்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**1.8 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையிலானதாக இருந்தது. தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சில கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 2009 ஆம் ஆண்டின் போது விபத்திற்குள்ளாகிய வாகனத்தை திருத்துவதற்காகத் தேசிய காப்புறுதிப் பொறுப்பு நிதியத்தின் சிபாரிசு செய்யப்பட்டிருந்தும் 2011 ஆம் ஆண்டின் போது பழுதுபார்ப்பதற்காக அனுப்பப்பட்டிருந்ததுடன் அதற்காக 2011 ஆம் ஆண்டின் போது தேசிய காப்புறுதிப் பொறுப்பு நிதியத்திலிருந்து பெறப்பட்ட ரூபா 500,000 தொகையான முற்பணம் தனியார் வாகனத் திருத்துமிடம் ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு இருக்கும் போது 2012 திசெம்பர் 31 வரையிலும் பழுதுபார்த்தல் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) களஞ்சியத்துக்குக் கிடைத்திருக்காத ரூபா 159,250 பெறுமதியான கணனி ஒன்றிற்காக 2012 திசெம்பர் 31 இல் தனியார் கம்பனியொன்றின் பெயரில் வரையப்பட்ட காசோலை 2013 சனவரி 31 ஆம் திகதி வரையிலும் விநியோகிக்கப்படாதிருந்தும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் சமர்ப்பிக்கப்படாத காசோலையின் கீழ்க் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) சமூக சேவைகள் அமைச்சின் எந்தவொரு உத்தியோகத்தரும் பங்கு பற்றாத மூக்குக் கண்ணாடி பகிர்ந்தளிக்கப்பட்டமைக்காக சமர்ப்பிக்கப்பட்ட பதிவேட்டை அடிப்படையாகக் கொண்டு ரூபா 422,380 தொகையானது வழங்குனர் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) நடமாடும் சேவை மூலம் மூக்குக் கண்ணாடி பகிர்ந்தளிக்கும் போது மூக்குக் கண்ணாடி வழங்குனர்கள் அமைச்சின் களஞ்சியத்திற்கு மூக்குக் கண்ணாடிகளை வழங்காது நேரடியாக நடமாடும் சேவை நிலையங்களுக்கு வழங்கியிருந்தனர். மீளாய்வாண்டின் போது அவ்வாறு வழங்கப்பட்ட ரூபா 13,749,353 பெறுமதியான மூக்குக் கண்ணாடிகள் உத்தியோகத்தர் ஒருவரால் கையேற்கப்பட்டமைக்கு, கண்ணாடிப் பெறுனர்களினால் பெறப்பட்டமைக்கான உறுதிப்படுத்தல்கள் அல்லது மூக்குக் கண்ணாடி வழங்கப்பட்டமைக்கு உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ்கள் இன்றி அதற்காகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(உ) முன்னாள் அமைச்சுச் செயலாளரினால் 2012 மார்ச் தொடக்கம் 2012 யூலை 13 ஆம் திகதி வரை பெறப்பட்ட எரிபொருள் படி ரூபா 159,625 ஆக இருந்ததுடன் அந்தக் காலத்திற்குரிய மேலதிக எரிபொருள் பெறுமதி ரூபா 158,717 ஆக இருந்ததுடன் அப் பெறுமதி எரிபொருள் படியில் 99 சதவீதமாக இருந்தது.

(ஊ) முன்னாள் மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) இனால் 2012 ஏப்ரல் தொடக்கம் திசம்பர் 18 ஆம் திகதி வரைப் பெறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் படி

ரூபா 175,950 ஆக இருந்ததுடன் அந்தக் காலத்துக்குரித்தாகப் பெறப்பட்ட மேலதிக எரிபொருளின் பெறுமதி ரூபா 229,195 ஆக இருந்தது. அது உரிய எரிபொருள் படியில் 130 சதவீதமாக இருந்தது.

(எ) மேலதிக எரிபொருள் பெற்றுக்கொள்வதின் தேவைப்பாட்டைக் காண்பிக்கின்ற நிகழ்ச்சித்திட்டங்களில் உத்தேசிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்ட விபரம், பங்குபற்றியவர்களின் பெயர்ப்பதிவேடு அல்லது செயல்முன்னேற்ற அறிக்கை போன்ற எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.9 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தது. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்களில் சில கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) கொள்வனவு வழிகாட்டி நடைமுறைகளைப் பின்பற்றாமை

(i) அமைச்சின் கொள்வனவுக் குழுவிற்கு உதவியளிப்பதற்கு நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் ஆகக் குறைந்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை 5 ஆக இருந்தது. அதனிடையே கொள்வனவு அனுபவமுள்ள உத்தியோகத்தர் ஒருவரை திணைக்களத் தலைவர் நியமித்த உத்தியோகத்தர் விடய நிபுணத்துவம் உடைய ஒருவராகவும் ஆகக் குறைந்தது ஒரு அங்கத்தவர் கொள்வனவுக் குழுவில் வெளிநபராகவும் இருக்க வேண்டும். சிறிய ஒப்பந்தங்களுக்காக மூன்று பேரை உள்ளடக்கிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட வேண்டிய போதிலும் சிறிய ஒப்பந்தங்களுக்காக கொள்வனவுக்குழு நியமிக்கப்பட்டிராத போது மூக்குக் கண்ணாடிகள் கொள்வனவு செய்வதற்கான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு கொள்வனவுக் குழுவின் பிரதிநிதியற்ற வெளி உத்தியோகத்தர்கள் மூவர் நியமிக்கப்பட்டிருந்தனர்.

(ii) 2012 நவம்பர் 23 ஆந் திகதி வரையிலும் கொள்வனவுக் குழுவின் அங்கீகாரமின்றி அமைச்சினால் ரூபா 2,564,648 தொகை செலவிடப்பட்டு தனியார் கம்பனியொன்றிலிருந்து 22,696 மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டிருந்தன.

(iii) 2012 ஆம் ஆண்டில் கொள்வனவுகள் பூர்த்தியடைந்திருக்கும் போது, வழங்குனர்கள் இணங்குவார்களாயின் 2013 ஆம் ஆண்டின் போது கொடுப்பனவு செய்யமுடியும் என பிரதான கணக்காளரினால் வழங்கப்பட்ட சிபார்சின் அடிப்படையில் பைபோகல் (Bifocal) வகையில் 250 மூக்குக் கண்ணாடிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

- 2013 சனவரி 15 ஆந் திகதி ரூபா 651,900 தொகை உரிய தனியார் கம்பனிக்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2013 சனவரி 18 ஆந் திகதி வரையிலும் அக் கொடுப்பனவுகள் காசேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை.

- கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களில் பெயர் குறிப்பிடப்பட்ட நபருக்கு அல்லது அவரின் சட்டரீதியான முகவருக்கு மாத்திரம் கொடுப்பனவு செய்யமுடியுமாக இருந்த போதிலும் ரூபா 651,900 தொகையான காசோலை இணைப்புச் செயலாளருக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கான காரணம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

- களஞ்சியத்திற்குக் கிடைக்காத ஒவ்வொன்றும் ரூபா 530 பெறுமதியான 1,230 மூக்குக் கண்ணாடிகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் மூக்குக் கண்ணாடி பெறுனர்களுக்கு வழங்கப்பட்டமைக்கு உத்தியோகத்தர் ஒருவரால் உறுதிப்படுத்தப்படாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**(ஆ) அதிகாரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்**

(i) அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த ஆலோசனையாளர் பதவி 2012 ஆகஸ்ட் 31 ஆந் திகதியில் உள்ளவாறு முடிவடைந்திருந்த போதிலும் சேவை நீடிக்கப்படாமல் சம்பளம், படிகள் மற்றும் எரிபொருள் என மாதாந்தம் ரூபா 76,440 படி மூன்று மாதங்களுக்காக ரூபா 229,320 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ii) சாரதி ஒருவருக்காக மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 14,559 தொகையான சம்பளம் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iii) மேலதிக எரிபொருள் பெற்றுக்கொள்ளும் போது உத்தேசிக்கப்பட்ட பிரயாணத்திற்கு முன்னர் அதற்காக அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாது ரூபா 32,817 தொகையான எரிபொருள் பட்டியல்கள் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தன.

(iv) மேலதிக எரிபொருள் உரித்தற்றிருக்கும் போது அமைச்சர் மற்றும் பிரதியமைச்சரின் பதவியணியினரில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு மாதாந்த எரிபொருள் படிக்கு மேலதிகமாக ரூபா 43,542 தொகையான மேலதிக எரிபொருள் பெறப்பட்டிருந்தது.

(v) நி.பி 135 இன் கீழ் நிதி அதிகாரக் கையளித்தல் கடிதத்தின் பிரகாரம் ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்காக ரூபா 10,000 தொகைக்கு மேற்பட்ட மேலதிக எரிபொருளை அங்கீகரிக்கும் அதிகாரம் அமைச்சுச் செயலாளருக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கு முரணாக பிரதான கணக்காளரினால் ரூபா 33,346 தொகையான மேலதிக எரிபொருளுக்கான அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது.

(vi) அமைச்சின் முன்னாள் செயலாளருக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 19,134 தொகையான எரிபொருள் படியினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.10 நட்டமும் இழப்பும்

இலங்கை அரசாங்க வலைப் பின்னல் செயற்திட்டத்தினால் அமைச்சிற்கு வழங்கப்பட்ட பொருட்களில் 02 கணனிகள், 01 மொனிடர், 01 தொலைபேசி என்பன காணாமல் போயிருந்தன.

## 1.11 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரித்த பதவியணியினரும் உள்ளவாறான ஊழியர் பதவியணியினரும்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீரித்த பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 14 | 10 | 04 |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 02 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 384 | 145 | 239 |
| (iv) | ஆரம்ப நிலை | 58 | 56 | 02 |
| | மொத்தம் | 459 | 213 | 246 |

(ஆ) பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 246 பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் முடியாதிருந்தது.

(ii) பின்வரும் மேலதிக பதவியணியினருக்காக ரூபா 1,259,399 தொகை சம்பளத்திற்காகச் செலுத்தப்பட்டிருந்தது.

| பதவி | அங்கீரித்த | உள்ளபடியான | மிகை |
|---|---|---|---|
| அமைச்சரின் பதவியணியினர் | | | |
| ஒளிப் படப்பிடிப்பு நிபுணர் | - | 01 | 01 |
| புகைப் படப்பிடிப்பாளர் | - | 01 | 01 |
| உதவி புகைப் படப்பிடிப்பாளர் | - | 01 | 01 |
| சாரதி | 03 | 08 | 05 |
| பிரதி அமைச்சரின் பதவியணியினர் | | | |
| சாரதி | 03 | 05 | 02 |

(iii) அமைச்சரின் பதவியணியினரில் சேவையாற்றுகின்ற அமைச்சின் 04 சாரதிகளுக்காக செலுத்தப்பட்ட ரூபா 818,647 தொகையான சம்பளம் அமைச்சு அலுவலகத்தின் நிதியேற்பாட்டின் கீழ் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 2. ஒதுக்கீட்டுத் தலைப்பு 216- சமூக சேவைகள் திணைக்களம்

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

சமூக சேவைகள் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணைக்கக்கூற்றுக்கள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 ஒக்தோபர் 15 ஆந் திகதி சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணைக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணைக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது செவ்வை பார்த்தலின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும்

செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

**2.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்குகளை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பேணுதல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதிஅறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் சமூக சேவைகள் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு இந்த அறிக்கையின் (அ) முதல் (ஈ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் 2.4 முதல் 2.10 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

**கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

(i) நன்கொடையாளரினால் காணிகளிலிருந்து கிடைக்கின்ற வருமானம் அனாதைகளான பிள்ளைகளின் பயன்பாட்டிற்காக ஈடுபடுத்துவதற்கு சமூக சேவைகள் அமைச்சிற்கு நன்கொடையளிக்கப்பட்ட 04 ஏக்கர் 03 றூட் 33 பேர்ச் பரப்பளவினையுடைய அமுனுகும்புர தென்னங் காணியிலிருந்தும் 01

ஏக்கர் 02 றூட் 9.9 பேர்சஸ் பரப்பளவான கலஹிட்டியாவ மற்றும் பில்லேவ என்ற வயலிலிருந்தும், தவடகஹலந்த என்ற பெயருடைய காணியில் அமைந்துள்ள 02 றூட் 09 பேர்சஸ் பரப்பளவான நிலக்கூறில் அமைந்துள்ள இரண்டு கடைகளிலிருந்தும் கிடைக்கின்ற வாடகையும், சிறுவர் இல்லம் அல்லது இல்லங்களுக்காக பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்ட முறை மற்றும் பெறப்பட்ட வருமானத்தை கணக்கு வைத்த முறை தொடர்பான விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நன்கொடையாளரால் சமூக சேவைகள் அமைச்சிற்கு நன்கொடை உரித்துறுதி மூலம் கையளிக்கப்பட்ட உரித்துறுதிகளின் மொத்தத் தொகை குறிப்பிடப்பட்டிராத மூன்று சேமிப்புக் கணக்கிலுள்ள பணம் நிலையான வைப்பாக மாற்றப்பட்டு அதிலிருந்து கிடைக்கின்ற வட்டியை அனாதைகளான பிள்ளைகளின் பயன்பாட்டிற்காக ஈடுபடுத்த வேண்டியதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அக் கணக்குகளில் காணப்பட்ட பணத்தின் தற்போதைய நிலைமை தொடர்பாக எந்தத் தகவல்களும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) பட்டுகம்பன தொழிற்பயிற்சி நிறுவனத்தின் பயிலுனர்களுக்கு கருவித் தொகுதிகளை வழங்குவதற்காக அனுப்பப்பட்ட ரூபா 10,000 தொகையில் உரிய உபகரணங்களை வழங்கியமைக்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பாதீட்டு முரண்கள்**

(i) 13 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 12 சதவீத்திற்கும் 98 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது. திறைசேரி மூலம் ஆண்டின் போது போதியளவான கட்டுநிதி வழங்கப்படாமையின் காரணமாக கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருந்ததுடன் அதன் மூலம் 2012 ஆம் ஆண்டில் நிதியேற்பாடு சேமிப்பு காண்பிக்கின்றதென பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ii) மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கு ஒப்பீடாக இணக்கஞ் செய்த போது நி.பி 66 மற்றும் 69 இன் மூலம் 18 சதவீதம் தொடக்கம் 25 சதவீம் வரையிலும், குறைநிரப்பு நிதியேற்பாட்டைப் பெற்றுக்கொள்ளுதல் மதிப்பிடப்பட்ட பெறுமதியுடன் இணக்கஞ் செய்த போது 50 சதவீதம் முதல் 126 சதவீதமான அளவினைக் கொண்டிருந்தது.

(iii) மிகை மதிப்பீடு தயாரிக்கப்பட்டமையினால் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு ஒப்பீடாக இணக்கஞ் செய்த போது 07 செலவின விடயங்களில் நி.பி 66 இன் மூலம் நிதியேற்பாடு 9 சதவீதம் முதல் 100 சதவீதமான இடைவெளியில் போதியளவாக செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது.

**(இ) பராயமடையாத வைப்புக்கள் மற்றும் பிணை வைப்புகள்**

(i) 18 வயதைப் பூர்த்தி செய்திருந்த போதிலும் இது வரையிலும் விடுவிக்கப்படாத பராயமடையாத 07 வைப்புக் கணக்குகளில் ரூபா 14,085 தொகையான மீதி காணப்பட்டது.

(ii) சேவையிலிருந்து விலகி கணக்காண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு 16 வயது தொடக்கம் 34 வயது வரையான காலம் கடந்திருந்த ரூபா 6,208 தொகையான பிணை வைப்புப் பணம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் விடுவிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

(i) இடர் கடன் மீதிகள் பெறுமதி ரூபா 89,976 ஆக இருந்த போதிலும் அது ரூபா 87,976 ஆகக் கணக்கில் காண்பிக்கப்பட்டமையினால் ரூபா 2,000 வேறுபாடு காணப்பட்டது.

(ii) 09 நபர்களிடமிருந்து கடன் தவணையாக ரூபா 5,000 தொகை மேலதிகமாக அறவிடப்பட்டிருந்தது.

(iii) 21601 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவான

இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 602,049 தொகையாக இருந்ததுடன் அந் நிலுவை மீதிகளை அறவிட முடியாதிருந்தது.

## 2.4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 2.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுகளினதும் செயலாளர்கள், மாகாணசபையின் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் என்போருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஆகக் குறைந்தது தொடர்ந்து வரும் 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் திணைக்களத்தினால் ஆண்டின் ஆரம்பத்தின் போது தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத் திட்டம் 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 2012 யூலை 24 ஆம் திகதி கணக்காய்விற்குக் கூட்டிணைந்த திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 2.4.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

மேலே பந்தி 2.4.1 இல் குறிப்பிடப்பட்ட அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் திணைக்களத்தினால் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2013 செப்தெம்பர் 04 ஆந் திகதியே பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்தது.

### 2.4.3 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 26 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபத்தின் பிராகாரம் 2012 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 செயற்பாடற்ற சொத்துக்கள்

தொழிற் பயிற்சியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக ரூபா 993,200 தொகை செலவில் 52 இயந்திரங்கள் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த 52 இயந்திரங்களிலும் 15 இயந்திரங்கள் 2013 நவம்பர் 01 ஆந் திகதி கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரையிலும் அதாவது ஒரு வருட காலமாக களஞ்சியத்தில் செயற்பாடற்றுக் காணப்படுகின்றமை பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

### 2.5.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

அ) சிறுவர் இல்லமொன்றை ஆரம்பிப்பதற்காக 2009 ஒக்தோபர் மாதம் திணைக்களத்திற்கு நன்கொடையளிக்கப்பட்ட கனேமுல்லையில் அமைந்துள்ள 348 பேர்சஸ் காணி மற்றும் வீடு 2011 சனவரி 05 ஆந் திகதி வரை நோக்கத்தின் செயற்பாட்டிற்கு பயன்படுத்தப்படாமையினால் திரும்பவும் வழங்கியவர் தனக்காக மீட்டிருந்தார்.

(ஆ) சிறுவர் இல்லாமொன்றை ஆரம்பிப்பதற்காக 2010 பெப்ரவரி 07 ஆந் திகதி சமூக சேவைகள் திணைக்களத்திற்கு நன்கொடையளிக்கப்பட்ட வரகாபொலயில் அமைந்துள்ள 01 றூட் 13 பேர்ச் காணி கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2013 யூலை 17 ஆம் திகதி வரையிலும் எவ்வித பயன்பாடான செயற்பாட்டிற்காகவும் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) நனடகொடையாகக் கிடைத்த அவிஸ்ஸாவெல்ல புவக்பிட்டியில் அமைந்துள்ள இறப்பர் காணியை வருமானம் பெறுகின்ற முறையில் பயன்படுத்தியிருக்கவில்லை.

### 2.5.3 வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) மெய்மையாய்விற்கு உள்ளாக்கப்படாத நிறுவனம்

2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச்சபை/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் சமூக சேவைகள் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திற்குரிய 2012 ஆம் ஆண்டின் பொருள் மெய்யைமாய்வு 2013 யூன் 10 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) பொருள் பற்றாக்குறை மற்றும் மிகைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்

நிதிப் பிரமாணம் 757(2) இல் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் பொருள் மெய்யமையாய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முரண்பாடுகள், பற்றாக்குறை மற்றும் காணாமல் போதல் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரினால் நி.பி 102 மற்றும் நி.பி 108 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும் திணைக்களத்திற்குரிய சீதுவ மற்றும் கெடவல லேவல தொழில் பயிற்சி நிறுவனத்திற்குரிய 2012 இன் பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட்ட பொருள் பற்றாக்குறையான 860 அலகுகள் மற்றும் மிகையான 346 அலகுகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### (இ) பொருட் பதிவேட்டிற்கு எடுக்கப்படாத பொருட்கள்

கெடவல லேவல தொழிற் பயிற்சி நிறுவனத்தில் 141 வகையான பொருள் வகைகளில் 267 விடயங்கள் பொருட் பதிவேட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.6 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகள் என்பனவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) நிதிப் பிரமாணம் | |
| நி.பி 322(1) | நம்பிக்கைப் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ள பணம் அல்லது நிதிப் பெறுமானமுடைய பொருட்கள் தொடர்பாக உத்தியோகத்தரினால் சகல சந்தர்ப்பங்களிலும் பதிவுகளை நாளதுவரையாக வைக்கப்பட வேண்டிய போதிலும் பராயமடையாத 08 கணக்குகள் மற்றும் 06 பிணை வைப்புக் கணக்குகள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) சமூக சேவைகள் திணைக்களத்தின் சுற்றுநிருபம் | |
| 1988 யூன் 22 ஆந் திகதிய 385 ஆம் இலக்க சுற்றுநிருபம் | |
| (i) 03(iv) ஆம் பந்தி | தொண்டர் நிறுவனங்களில் தொழில் ஆலோசனையாளர்கள் தகைமைகளுடன் திணைக்களத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் சேர்க்கப்பட்ட நபர்கள் இருந்தமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ii) 03(v) ஆம் பந்தி | தொண்டர் நிறுவனத்தினால் ஊனமுற்றோருக்காக நடாத்தப்படுகின்ற பாடநெறிகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிபார்சின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு சமூக சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்க வில்லை. |
| (iii) 08(i) ஆம் பந்தி | தொழிற்பயிற்சி வழங்குகின்ற நிறுவனங்களில் அடிக்கடி நடாத்தப்பட்ட பயிற்சி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கு, ஆலோசனை வழங்குவதற்கு, மீளாய்வு செய்வதற்கு சமூக சேவைகள் உத்தியோகத்தர்களுக்கு, சமூக சேவைகள் உதவிப் பணிப்பாளர்களுக்கு, மாவட்டச் செயலாளருக்கு அதிகாரம் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் சமூக சேவைகள் உத்தியோகத்தர்களின் அறிக்கையின் மூலம் தொழில்பயிற்சி நிலையம் தொடர்பாக போதியளவு கவனம் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.7 செயலாற்றல்

2012 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) தொழில் பயிலுனர்களுக்கு திணைக்களத்திலிருந்து வழங்கப்படுகின்ற கொடுப்பனவுகள் தாமதித்து செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் மீளாய்வாண்டின் போது 200 தொழிற்பயிற்சி கருவித் தொகுதிகள் வழங்குவதற்கு ரூபா 2,000,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது ரூபா 1,600,000 செலவில் 78 கருவித் தொகுதிகள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன.

(இ) ஆண்டின் ஆரம்பத்தில் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 1,727,000 தொகையான ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த 05 நிர்மாண மற்றும் பராமரிப்புச் செயற்பாடுகள் 2012 நவம்பர் மாதம் வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிராததுடன் ஆண்டின் இறுதியில் சமர்ப்பிக்கப்பட்ட திருத்தப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் இது அகற்றப்பட்டிருந்தது.

(ஈ) திருத்தப்பட்ட வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது நடத்துவதற்குத் திட்டமிடப்பட்ட பின்வரும் 02 நிகழ்ச்சித் திட்டங்கள் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

| விபரம் | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை |
|---|---|
| | ரூபா |
| Workshop on the update of Curriculam in Vocational Training Centers | 250,000 |
| Workshop on progress review of Vocational Training Centers | 75,116 |

(உ) திணைக்களத்தினால் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் ஆண்டின் போது அமுற்படுத்தப்பட்டிருந்தது.

(i) சர்வதேச தொடர்பு மற்றும் மக்கள் தொடர்பு தொடர்பான ஒரு நாள் செயலமர்வு

(ii) மரத் தளபாடங்களை நவீன மயப்படுத்துவது தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

(ஊ) தொழிற்பயிற்சி வழங்கப்பட்ட ஊனமுற்ற மாணவர்கள் நிறுவனத்திலிருந்து வெளியேறுவதற்கு முன்னர் கருவித் தொகுதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அமுனுகும்புர, கெடவல லேவல மற்றும் சுபித நிறுவனங்களிலிருந்து வெளியேறிய முறையே 40 பயிலுனர்களுக்கும், 05 பயிலுனர்களுக்கும் மற்றும் 03 பயிலுனர்களுக்கும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.8 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ள சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையிலானதாக உருவாகியிருந்தது. தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சிலவற்றின் விபரம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

(அ) “மஹா கருணா” அமைப்பினால் அனுப்பிவைக்கப்பட்ட 40 கணனிகள் இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சின் கீழ் வவுனியாவில் உள்ள Chen Sulan கணனி பாடசாலைக்கு வழங்கப்பட வேண்டுமென அந்த அமைப்பினால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் திணைக்களத்தின் சீதுவை தொழிற்பயிற்சி நிலையத்தின் ஊனமுற்ற பிள்ளைகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கு சமூக சேவைகள் அமைச்சின் மேலதிக செயலாளரினால் (கட்டுப்பாடு) நிதி திட்டமிடல் அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் கோரப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) வவுனியா, குருணாகல் மற்றும் பொலன்னறுவை போன்ற மாவட்டங்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக சமூக சேவைகள் அமைச்சிற்கு சிங்கப்பூரின் “மஹா கருணா” அமைப்பினால் இரண்டு சந்தர்ப்பங்களின் போது அனுப்பப்பட்ட நன்கொடை இருப்புக்களை விடுவிப்பதற்காக ரூபா 844,356 தொகை நலன்புரி செலவின விடயத்தின் கீழ் செலவிடப்பட்டிருந்தது.

திணைக்களத்தினால் இந்தப் பொருட்களை விடுவிப்பதற்காக செலவினங்கள் செய்யப்பட்டிருந்த போதிலும் பொருட்கள் சமூக சேவைகள் அமைச்சிற்கு அனுப்பப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) “மஹா கருணா” அமைப்பினால் டொலர் 2,120 பெறுமதியான 09 வகைப் பொருட்களில் 442 அலகுகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் அந்த பொருட்களை பகிர்ந்தளிப்பது தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சீதுவை தொழிற் பயிற்சி நிறுவனத்திற்கு கிடைத்த நன்கொடையாகக் குறிப்பிடப்பட்டு விடுவிக்கப்பட்ட 08 வகைப் பொருட்களில் 204 அலகுகள் பொலன்னறுவை மாவட்டத்தின் ஊனமுற்ற பிள்ளைகளுள்ள பாடசாலைகள், தொண்டர் அமைப்புக்கள் மற்றும் தொழிற்பயிற்சி நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிக்கும் வகையில் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) நன்கொடையாகக் கிடைத்த 05 வகையான பொருட்களில் 60 அலகுகளை பகிர்ந்தளிக்கும் முறை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நபரொருவருக்கு அமெரிக்க ஐக்கிய குடியரசிலிருந்து நன்கொடையாகக் கிடைத்த பொருள் இருப்புக்களை சுங்கத்திடமிருந்து விடுவிப்புச் செய்வதற்காக தனியார் நிறுவனமொன்றிற்கு ரூபா 220,927 தொகை திணைக்களத்தினால் செலுத்தப்பட்டிருந்ததுடன் நன்கொடைப் பொருட்கள் அல்லது பொருட்கள் தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.9 முகாமைத்துவ பலவீனங்கள்

2012 ஆம் ஆண்டின் சனவரி தொடக்கம் ஆகஸ்ட் வரை 10 தொண்டர் அமைப்புக்களுக்கு ரூபா 3,244,190 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் ஊனமுற்ற இளைஞர் யுவதிகளுக்கு தொழிற்பயிற்சி வழங்கி திணைக்களத்திலிருந்து உதவி பெறுகின்ற தொண்டர் அமைப்புக்கள் அரச சார்பற்ற செயலகத்தில் பதிவு செய்யப்பட்டமை குறித்து பரிசீலனை செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.10 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரித்த பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியினரும்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீரித்த பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| i | சிரேஷ்ட நிலை | 10 | 08 | 02 |
| ii | மூன்றாம் நிலை | 164 | 143 | 21 |
| iii | இரண்டாம் நிலை | 330 | 295 | 35 |
| iv | ஆரம்ப நிலை | 92 | 70 | 22 |
| v | ஏனையோர் | 09 | 02 | 07 |
| | மொத்தம் | 605 | 518 | 87 |

(ஆ) சமூக சேவைகள் திணைக்களத்தின் 18 உத்தியோகத்தர்கள் ஏனைய நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அதற்காக ரூபா 5,427,852 தொகையான சம்பளம் திணைக்களத்தினால் செலவிடப்பட்டிருந்தது.